தேசிங்குராஜனுக்கு, கடலி கிராமத்திலே நினைவுச்சின்னம் எழுப்புவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களின் நினைவினை என்றென்றும் போற்றிடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இன்றைய நிலையில், அரசின் நிதிநிலைக்கேற்ப அரசு சிந்திக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *120*, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

120—

சுற்றுலாத் தலம்

***28455—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதியில் தீர்த்த மலை, அனுமன் தீர்த்தம், பாம்பாறு அணை, எட்டிப்பட்டி தூவல் ஆகிய இடங்களில் சுற்றுலாத் தலம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதியில் தீர்த்த மலை, அனுமன் தீர்த்தம், பாம்பாறு அணை, எட்டிப்பட்டி தூவல் ஆகிய இடங்களில் சுற்றுலாத் தலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2003 மார்ச் 27]

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்த மலை ஒரு சிறப்பு வாய்ந்த இடம். மிகக் கடுமையான வறட்சி நிலவுகின்ற நேரத்திலேயும், என் தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர் கேட்டு மக்கள் கஷ்டப்படுகின்ற நேரத்திலேயும்கூட, மழை பெய்கிற காலத்திலேயும், மழை இல்லாத காலத்திலேயும் ஒரே சீராக ஒரு நீரூற்று ஊற்றிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறப்பு வாய்ந்த இடம் தீர்த்த மலை. அதேபோன்று, அனுமன் தீர்த்தம் பகுதியில், அடியிலிருந்து நீர் பொங்கி ஒரு டாங்க் வழியாக ஊற்றிக்கொண்டிருந்தது—தற்போது நின்றிருக்கிறது. அதேபோல, எட்டிப்பட்டி தூவல் மிகச் சிறந்த இடம். பாம்பாறு அணை என்பது சிறந்த போக்குவரத்துக்கு வசதியான இடம். எனவே, அத்தகைய இடங்களில் சுற்றுலாத் தலம் அமைக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீர்த்த மலை என்கின்ற பகுதியில் சுற்றுலாத் தலம் அமைக்க சர்வே நடைபெற்றிருக்கிறது. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிவிப்பால் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அதைத் துரிதப்படுத்த வேண்டும். அமைச்சர் அவர்கள், இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, தீர்த்த மலையில் சுற்றுலாத் தலம் அமைக்கவும், மற்றப் பகுதிகளையும் அதேபோன்று ஆக்க வேண்டுமென்றும் மறுபரிசீலனை செய்ய ஆவன செய்திட வேண்டுமாய்த் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ஒவ்வொரு சுற்றுலாத் தலத்திலும், அப்பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, சுற்றுலாத் துறையால் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, தங்கும் இடம், உணவகம்........

முற்பகல் *11-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிற வரைக்கும், பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[2003 மார்ச் 27

மாண்புமிகு திரு. அ. மில்லர்: சாலை வசதி, விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறை முதலிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம், பாம்பாறு அணை, பூங்கா மேம்பாடு, ஓசூரில் உள்ள கேலவரப்பள்ளி அணைக்கட்டுத் திட்டப் பூங்கா மற்றும் பூங்கா மேம்பாடு, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் உள்ள பூங்காவை அழகுபடுத்தல் ஆகிய திட்டங்களுக்குத் தலா ரூ. 20 இலட்சம் வீதம், மொத்தம் ரூ. 60 இலட்சம் சுற்றுலாத் துறையின் மூலம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் பணிகள் துவங்கப்பட்டு, நிறைவு பெறும் தறுவாயில் உள்ளன. தீர்த்த மலை, மாவட்ட உலாத் தலமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தீர்த்த மலையில் 1988 ஆம் ஆண்டு, சுற்றுலாத் துறையால் வழங்கப்பட்ட ரூ.4 இலட்சத்தில் சுற்றுலாப் பயணிகள் ஓய்வுக் கூடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2003-2004, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003-2004 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிகிற வரைக்கும் ஏதும் எடுத்துக்கொள்வதில்லை. 2 ஆம் தேதிக்கு மேலே எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்: